**MCOP No. 52 /2021**

**தேதி- 22.02.2024**

**பெயர் : திரு. கன்னியப்பன் த/பெ. ராமசாமி**

**ம.சா.1- 1ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை-**

எதற்காக மனு போட்டுள்ளேன் என்றால் மகன் இறந்ததற்காக போட்டுள்ளேன். எவ்வளவு தொகை நஷ்ட ஈடு கேட்டுள்ளேன் என்றால் எனக்கு தெரியவில்லை. விபத்தை நான் நேரில் பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை, போன் மூலம் தகவல் தெரிந்துக்கொண்டேன். வாகன உரிமையாளர் 1ம் எதிர்மனுதாரர் மீதும் காப்பீடு நிறுவனம் 2ம் எதிரமனுதாரர் மீதும் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வாகனம் மினிலாரி என்றால் சரிதான். வாகனத்தை வாகனத்தின் உரிமையாளர் ஓட்டவில்லை என்றாலும் வேறொருவர் ஓட்டினார் என்றால் சரிதான். ஓட்டுனரை வழக்கில் சேர்த்துள்ளோமா என்றால் சேர்த்துள்ளேன். என்னுடைய மனுவில் மினி லாரி ஓட்டுனார் அஜாக்கிரதை மற்றும் அதிவேகத்தால் தான் விபத்து நடந்தது என்று பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. விபத்தின் போது என் மகன் Hero Honda Splendor Plus இருசக்கர வாகனத்தை ஓட்டிச்சென்றார் என்றால் சரிதான். மினிலாரி இரண்டாம் எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்து ஏற்படுத்திய வாகனத்திற்கு பதிவு சான்று ,காப்பீடு சான்று ஓட்டுனருக்கு ஓட்டுனர் உரிமம் எல்லாம் சரியாக உள்ளது என்றால் சரிதான். அனைத்து ஆவணங்களும் மனுவில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். விபத்து வாகனம் காப்பீடு செய்யப்பட்டதால் நான் இரண்டாம் எதிர்மனுதாரர் மீது தான் வழக்கு தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றால் சரிதான். 1ம் எதிரிமனுதாரர். மீதான என்னுடைய மனு

நிலைதக்கது அல்ல என்றால் சரியல்ல. இம்மனுவை 1ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Petitioners / Respondents and admitted by the witness to be correct.

// Sd// K.Vijaya, B.Sc, B.L.,
Additional District Judge.
Arani.